TAMILTH Puducherry 1 Regional_02 S.BHASKAR 225919

பழங்குடி மொழிகளை பாதுகாக்கும் கடமை நமக்குள்ளது

‘தொல்குடி’ மாநாட்டில் நிதி துறை செயலர் உதயசந்திரன் வலியுறுத்தல்

சென்னை

பழங்குடி மொழிகளை பாதுகாக்கும் கடமை நமக்குள்ளது என்று நிதித் துறைச் செயலர் த.உதயசந்திரன் கூறினார்.

தமிழக அரசின் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை சார்பில் ‘தொல்குடி’ என்ற தலைப்பில் தேசிய அளவிலான 2 நாள் மாநாட்டை ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் கயல்விழி செல்வராஜ் சென்னையில் தொடங்கிவைத்தார். இரண்டாம் நாள் நிகழ்வு சென்னை எழும்பூரில் உள்ள மெட்ராஸ் ஸ்கூல் ஆஃப் சோஷியல் ஒர்க்ஸ் வளாகத்தில் நடைபெற்றது. அழிந்துவரும் நிலையில் உள்ள பழங்குடியினர் மொழிகள், வாய்மொழி வழக்காறுகள், அம்மொழிகளை கற்பித்தலுக்கும் பயில்வதற்குமான ஆதாரங்கள், அவற்றை ஆவணப்படுத்தல், பழங்குடியினர் மொழிகளுக்கு புத்துயிர் ஊட்டுவதற்கு நவீனத் தொழில்நுட்ப முறைகளையும், ஊடகங்களையும் பயன்படுத்துதல் போன்ற தலைப்புகளில் அறிஞர்கள் உரையாற்றினர். இதில், சமூகவியல் போன்ற பல்வேறு துறைகளைச் சேர்ந்த மாணவர்கள், ஆய்வாளர்கள் பங்கேற்றனர்.

நிறைவு விழாவில், தமிழக ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறைச் செயலர் ஜி.லட்சுமி பிரியா வரவேற்றார். நிதித் துறைச் செயலர் த.உதயசந்திரன் தலைமை வகித்து பேசியதாவது:

மொழி என்பது வெறும் எழுத்துகளைச் சார்ந்த கருவி அல்ல. பண்பாட்டுக் களஞ்சியமாகும். நமது தமிழ் மொழி 3,300 ஆண்டுகள் பழமையானது என்று அறிவியல் பூர்வமாக நிரூபிக்கப்பட்டுள்ளது. சங்க இலக்கியங்களில் காணப்படும் வேலன் வெறியாட்டு, பத்தினி வழிபாடு போன்ற பண்பாட்டுக் கூறுகள் தற்போதும் கேரளத்திலும், இலங்கையிலும் வேறு பெயர்களில் வழக்கத்தில் உள்ளன. நம் சமூகத்தில் பேசப்படும் பழங்குடி மொழிகளைப் பாதுகாக்கும் கடமை நமக்குள்ளது. பழங்குடியினர் நலனுக்காக செயல்படுவதுடன், தங்களது பண்பாடு குறித்த பெருமிதத்தை அவர்கள் இழந்துவிடாமல் பாதுகாப்பதும் அவசியமாகும். இவ்வாறு அவர் பேசினார்.

உயர் நீதிமன்ற முன்னாள் நீதிபதி கே.சந்துரு பேசும்போது, "பழங்குடியினரின் பண்பாடு எவ்வளவு உயர்ந்தது என்பதை பொது சமூகம் புரிந்துகொள்ள வேண்டும். பழங்குடியினர் மக்கள் நலனுக்காக ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் தமிழக அரசுசார்பில் மேற்கொள்ளப்படுகின்றன. இந்திய அரசியல் சட்டத்தின் 29-ம் பிரிவு, சிறுபான்மையினரின் கல்வி, மொழி, வரிவடிவம் போன்றவற்றுக்கான பாதுகாப்பை உறுதிப்படுத்துகிறது. கிராம இந்தியா, சேரிகள் உள்ள இந்தியா, பழங்குடிகள் வாழும் இந்தியா ஆகிய மூன்றின் வளர்ச்சியும் உறுதிப்பட வேண்டும்'' என்றார். மெட்ராஸ் ஸ்கூல் ஆஃப் சோஷியல் வொர்க்ஸ் இயக்குநர் ராஜா சாமுவேல் நன்றி கூறினார்.

திருக்கோவிலூர் ரயில் நிலையத்தில்

அனைத்து கட்டமைப்பு வசதிகளும் செய்து தர வேண்டும்

ரயில்வே ஆலோசனைக் குழு உறுப்பினர் வலியுறுத்தல்

விழுப்புரம்

திருச்சி ரயில்வே கோட்ட மேலாளர் எம்.எஸ்.அன்பழகன், உதவி கோட்ட மேலாளர் பி.கே. செல்வம் மற்றும் அலுவலர்கள் அடங்கிய குழு திருக்கோவிலூர் ரயில் நிலையத்திற்கு வந்தனர். அப்போது விழுப்புரம் தெற்கு மாவட்ட பாஜக தலைவர் வி.ஏ.டி. கலிவரதன், திருக்கோவிலூர் ரயில்வே ஆலோசனைக் குழு உறுப்பினரும், விழுப்புரம் தெற்கு மாவட்ட பாஜக சுற்றுச்சூழல் பிரிவு தலைவருமான வழக்கறிஞர் என்ஆர்கே என்கிற என்.ராதாகிருஷ்ணன் மற்றும் பாஜகவினர் வரவேற்றனர். தொடர்ந்து அதிகாரிகள் குழுவினர் திருக்கோவிலூர் ரயில் நிலையத்தை பார்வையிட்டு ஆலோசனை நடத்தினர். அப்போது என்ஆர்கே, அதிகாரிகளிடம் ஒரு கோரிக்கை மனு கொடுத்தார்.

திருச்சி ரயில்வே கோட்ட அதிகாரிகள் குழுவினர், திருக்கோவிலூர் ரயில் நிலையத்தை பார்வையிட்டு ஆலோசனை நடத்தினர்.

அந்த மனுவில் கூறியிருப்பதாவது:

திருக்கோவிலூர் ரயில் நிலையத்தை பிரதமரின் சிறப்பு ஆன்மிக மேம்பாட்டு திட்டத்தின் கீழ் தேர்வு செய்து, தேவையான அனைத்து கட்டமைப்பு வசதிகளையும் செய்து கொடுக்க வேண்டும். அத்துடன் புதுச்சேரியில் இருந்து பெங்களூருக்கு, விழுப்புரம் - திருக்கோவிலூர் வழியாக செல்லும் தினசரி எக்ஸ்பிரஸ் ரயில் சேவையை திருக்கோவிலூரில் நின்று செல்லும் வகையில் இயக்க வேண்டும். திருவண்ணாமலையில் இருந்து தாம்பரம் வரை செல்லும் பயணிகள் ரயில் சேவையை சென்னை கடற்கரை ரயில் நிலையம் வரை நீட்டிக்க வேண்டும். விழுப்புரத்தில் இருந்து ஆந்திரா, தெலங்கானா மற்றும் கர்நாடகா மாநிலங்களுக்கான கூடுதல் ரயில் சேவை திருக்கோவிலூர் ரயில் நிலையம் வழியாக தொடங்கப்பட வேண்டும். திருக்கோவிலூர் ரயில் நிலையத்தில் பார்சல் அலுவலகம் திறக்க வேண்டும். திருக்கோவிலூர் ரயில் நிலையம் வழியாக ரயில்வே மேம்பாலம் அமைக்க வேண்டும். முகையூர் ரயில் நிலையத்தையொட்டி சுமார் 42 ஏக்கர் பரப்பளவில் அரசு நிலம் இருப்பதால் ரயில்வே ஷெட் அமைக்க வேண்டும். திருவண்ணாமலையில் இருந்து திருக்கோவிலூர், விழுப்புரம் வழியாக மும்பை மற்றும் டெல்லிக்கு பயணிகள் ரயில் இயக்க வேண்டும் என குறிப்பிட்டிருந்தார்.

மனுவைப் பெற்றுக்கொண்ட அதிகாரிகள் பரிசீலனை செய்து நடவடிக்கை எடுக்கப்படும் என தெரிவித்தனர். அப்போது பாஜக நிர்வாகிகள் அழகேசன், பொம்மை ராஜா, டி.எம்.ஜி.ராஜேந்திரன், சுகுமார் மற்றும் நிர்வாகிகள் உடனிருந்தனர்.

வடபழனி மெட்ரோ ரயில் நிலையத்தில்

காவலரை தாக்கிய இளைஞர் கைது

சென்னை

மதுபோதையில் காவலரை தாக்கிய இளைஞரை போலீஸார் கைது செய்தனர்.

சென்னை வடபழனி மெட்ரோ ரயில் நிலையத்தில் 3-வது பட்டாலியன் காவலரான சிலம்பரசன் (23), நேற்று முன்தினம் இரவு காவல் பணியில் ஈடுபட்டிருந்தார். அப்போது, இளைஞர் ஒருவர் மது போதையில் மெட்ரோ ரயில் நிலையத்துக்கு வந்தார். அவரை காவலர் சிலம்பரசன் தடுத்தி நிறுத்தினார்.

அப்போது இருவருக்கும் வாக்குவாதம் ஏற்பட்டது. வாக்குவாதம் முற்றிய நிலையில், அந்த இளைஞர், காவலர் சிலம்பரசனை தாக்கி உள்ளார்.

தகவல் அறிந்து வடபழனி போலீஸார் சம்பவ இடத்துக்கு வந்தனர். காவலரை தாக்கிய இளைஞரை காவல் நிலையம் அழைத்துச் சென்று விசாரித்தனர். அவர், பட்டாபிராம் பகுதியை சேர்ந்த ஆகாஷ் (25) என்பது தெரியவந்தது.

இதையடுத்து வழக்கு பதிவு செய்த போலீஸார் ஆகாஷை கைது செய்து விசாரித்து வருகின்றனர்.

கே.கே.நகரில்

மெத்தம்பெட்டமைன் போதை பொருள் பறிமுதல்

சென்னை

கே.கே.நகரில் மெத்தம்பெட்டமைன் போதை பொருளை பறிமுதல் செய்த போலீஸார், அதை வைத்திருந்த 2 பேரை கைது செய்தனர்.

சென்னை கே.கே.நகர் சுடுகாடு அருகே நேற்று முன்தினம் போலீஸார் கண்காணிப்பு பணியில் ஈடுபட்டிருந்தபோது, அவ்வழியாக இருசக்கர வாகனத்தில் வந்த 2 பேரை நிறுத்தி விசாரணை நடத்தினர்.

அவர்கள் முன்னுக்குப்பின் முரணாக பதில் அளித்ததால், சந்தேகமடைந்த போலீஸார் அவர்களை சோதனை செய்தனர். அப்போது, மெத்தம்பெட்டமைன் எனும் போதைப் பொருளை அவர்கள் மறைத்து வைத்திருந்தது தெரியவந்தது.

இதுகுறித்து போலீஸார் நடத்திய விசாரணையில், அவர்கள் கோவூர் பகுதியை சேர்ந்த ராஜேஷ்குமார் (27), விருகம்பாக்கத்தை சேர்ந்த சாய் பாலாஜி (31) என்பதும், வெளிமாநிலத்தில் இருந்து மெத்தம்பெட்டமைனை வாங்கி வந்து சென்னையில் விற்பனை செய்ததும் தெரியவந்தது. இதையடுத்து 2 பேரையும் கைது செய்த போலீஸார், அவர்களிடம் இருந்து 42 கிராம் மெத்தம்பெட்டமைன், 13 ஊசிபோடும் சிரஞ்சிகளை பறிமுதல் செய்தனர்.

காரின் கண்ணாடியை உடைத்து ஐபோன், 3 பவுன் நகை திருட்டு

மதுராந்தகம்

மயிலாடுதுறை மாவட்டத்தைச் சேர்ந்த சுப்பிரமணி, குடும்பத்துடன் காரில் சென்னை நோக்கி நேற்று சென்று கொண்டிருந்தார். அப்போது, மேல்மருவத்தூர் ஆதிபராசக்தி கோயிலில் அம்மனை தரிசனம் செய்வதற்காக, கோயில் அருகே காரை நிறுத்தினார். குடும்பத்துடன் கோயிலுக்குள் சென்று திரும்பி வந்துபோது, காரின் பின்னால் உள்ள வலது பக்கக் கண்ணாடி உடைக்கப்பட்டிருந்தது.

காரின் உள்ளே வைத்திருந்த 3 பவுன் நகை, ரூ.10 ஆயிரம் ரொக்கம், ரூ.1 லட்சம் மதிப்புள்ள ஐபோன் ஆகியவற்றை மர்ம நபர்கள் திருடிச் சென்றிருப்பதை கண்டு அதிர்ச்சியடைந்தார். இதுகுறித்து மேல்மருவத்தூர் போலீஸில் புகார் அளித்தார். இதன் பேரில், போலீஸார் வழக்குப் பதிவுசெய்து திருட்டு சம்பவத்தில் ஈடுபட்ட நபர்களைத் தேடி வருகின்றனர்.

பூந்தமல்லி அருகே

பள்ளத்தில் கார் கவிழ்ந்து விபத்து

காயங்களுடன் 5 பேர் தப்பினர்

பூந்தமல்லி

ஆந்திர மாநிலத்தைச் சேர்ந்தவர் பவன்(38). இவரது நண்பர் ஒருவர் வெளிநாட்டிலிருந்து விமானம் மூலம் நேற்று காலை சென்னைக்கு வந்துள்ளார். அவரை அழைத்துச் செல்வதற்காக பவன், 3 நண்பர்களுடன் ஆந்திராவிலிருந்து சென்னை விமான நிலையத்துக்கு காரில் வந்து, வெளிநாட்டிலிருந்து வந்த நண்பரை அழைத்துக் கொண்டு ஆந்திரா நோக்கி மீண்டும் காரில் சென்று கொண்டிருந்தார்.

கார் பூந்தமல்லி அருகே காட்டுப்பாக்கம் டிரங்க் சாலையில் சென்று கொண்டிருந்தபோது, கட்டுப்பாட்டை இழந்து, தடுப்புகளை உடைத்துக் கொண்டு 400 கிலோ வாட் திறன் கொண்ட மின்சார கேபிள்களை பூமிக்கு அடியில் புதைப்பதற்காக சாலையோரத்தில் தோண்டப்பட்ட பள்ளத்தில் கவிழ்ந்தது. காரில் இருந்தவர்களை அவ்வழியாகச் சென்ற பிற வாகன ஓட்டிகள் மீட்டனர். இதில் சிறிய காயங்களுடன் பவன் உள்ளிட்ட 5 பேரும் உயிர் தப்பினர்.

ஆவடி போக்குவரத்து புலனாய்வுப் பிரிவு போலீஸார் சம்பவ இடம் விரைந்து, பள்ளத்தில் கவிழ்ந்து கிடந்த காரை கிரேன் உதவியுடன் மீட்டனர். இதனால், அந்த சாலையில் ஒரு மணி நேரம் போக்குவரத்து பாதிக்கப்பட்டது.

பள்ளத்தில் கவிழ்ந்து கிடந்த காரை ஆவடி போக்குவரத்து புலனாய்வுப் பிரிவு போலீஸார் கிரேன் உதவியுடன் மீட்டனர்.

செங்கல்பட்டு அருகே அரசு பள்ளியில் ஏற்பட்ட

தீ விபத்தில் புத்தகங்கள் எரிந்து சேதம்

மாவட்ட முதன்மை கல்வி அதிகாரி நேரில் விசாரணை

செங்கல்பட்டு

செங்கல்பட்டு அருகே சிங்கப்பெருமாள் கோவில் அரசுப் பள்ளியில் ஏற்பட்ட தீ விபத்தில் புத்தகங்கள் எரிந்து நாசமாகின.

செங்கல்பட்டு மாவட்டம் சிங்கப்பெருமாள் கோயில் அனுமந்தபுரம் சாலையில் அரசு மேல்நிலைப் பள்ளி உள்ளது. இந்த பள்ளி வளாகத்தில் உள்ள ராமானுஜம் பிளாக்கில், செங்கல்பட்டு கல்வி மாவட்ட அரசுப் பள்ளிகளுக்கு வழங்கப்படும் புத்தகங்களுக்கான கிடங்கு உள்ளது. கடந்த 2018-19-ம் ஆண்டு பழைய புத்தகங்கள் சுமார் 10 டன் அளவுக்கு இந்த கிடங்கில் வைக்கப்பட்டு இருந்தன.

தீ அணைக்கப்பட்ட நிலையில் புகைமூட்டமாக காணப்பட்ட புத்தகங்கள் வைக்கப்பட்டுள்ள அறை.

இந்நிலையில், நேற்று காலை 11 மணிக்கு புத்தகங்கள் வைக்கப்பட்டிருந்த அறையிலிருந்து திடீரென புகை வெளியேறியது. அப்போது என்.எஸ்.எஸ். மாணவர்களுக்கு பயிற்சி அளித்துக் கொண்டிருந்த பள்ளியின் உதவி தலைமை ஆசிரியர் வில்லியம்ஸ் இதைக் கண்டார். அவர் உடனடியாக காவல் கட்டுப்பாடு அறைக்கு தகவல் தெரிவித்தார். தகவல் அறிந்து விரைந்து சென்ற மறைமலை நகர் தீயணைப்பு வீரர்கள் தண்ணீரைப் பீய்ச்சி அடித்து தீயை கட்டுக்குள் கொண்டு வந்தனர்.

அதற்குள் நூற்றுக்கணக்கான புத்தகங்கள் எரிந்து சேதமடைந்தன. இதுகுறித்து வழக்குப் பதிவு செய்த போலீஸார் விபத்துக்கு மின்கசிவு காரணமா அல்லது சதிச் செயலா என விசாரணை நடத்தி வருகின்றனர். பள்ளியில் என்.எஸ்.எஸ். முகாம் நடைபெற்றதால் தீ விபத்து உடனடியாக கண்டறியப்பட்டு பெரிய விபத்து ஏற்படுவதற்கு முன் தடுக்கப்பட்டது.

இந்நிலையில் விபத்து ஏற்பட்ட பள்ளியில் மாவட்ட முதன்மைக் கல்வி அதிகாரி கற்பகம் நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார். ‘‘இந்த புத்தகங்கள் அனைத்தும் 2018-19 ஆண்டுக்கான பழைய புத்தகங்கள். இவற்றை எடுத்துச் செல்லும்படி தமிழ்நாடு பாடநூல் கழகத்துக்கு கடிதம் அனுப்பப்பட்டுவிட்டது. ஆனால், அவர்கள் இன்னும் அப்புறப்படுத்தவில்லை’’ என மாவட்ட முதன்மைக் கல்வி அதிகாரி கற்பகம் தெரிவித்தார்.

தமிழர் முன்னேற்றப் படை தலைவர்

வீரலட்சுமியின் கணவர் மீது 4 பேர் தாக்குதல்

திருவள்ளூர்

திருவள்ளூர் அருகே வேப்பம்பட்டில் சாப்பிட்ட இலையை வீட்டருகே வீசிய தகராறில், தமிழர் முன்னேற்றப் படை நிறுவனத் தலைவர் வீரலட்சுமியின் கணவர் மீது 4 பேர் தாக்குதல் நடத்திய சம்பவம், பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

திருவள்ளூர் அருகே உள்ள வேப்பம்பட்டு, பிரியா நகர், எம்.ஆர்.கே.தெருவைச் சேர்ந்தவர் கணேசன்(43). இவர், தமிழர் முன்னேற்றப் படையின் நிறுவனத் தலைவர் வீரலட்சுமியின் கணவர். கணேசன் வீட்டருகே வசித்து வருபவர் வெங்கடேசன். இவரது உறவினர் சமீபத்தில் இறந்ததால், 16-ம் நாள் காரிய நிகழ்ச்சி நேற்று நடந்தது.

இந்த நிகழ்ச்சியில் பங்கேற்றவர்கள் நேற்று மதியம் உணவு சாப்பிட்ட இலைகள் மற்றும் குப்பையை கணேசன் வீட்டருகே கொட்டியதாக கூறப்படுகிறது.

இதை கணேசன் தட்டிக் கேட்டார். இதனால் ஏற்பட்ட வாக்குவாதம் முற்றியதன் விளைவாக, வெங்கடேசன் மற்றும் அவரது உறவினர்களான மணிகண்டன், பாஸ்கர், லட்சுமணன் ஆகிய 4 பேர், கட்டையால் கணேசனை தாக்கியதாக கூறப்படுகிறது.

> சாப்பிட்ட இலைகளை வீட்டருகே கொட்டியதாக கூறப்படுகிறது.

இதில் தலையில் படுகாயமடைந்த கணேசன், வேப்பம்பட்டு பகுதியில் உள்ள மருத்துவமனையில் முதலுதவி சிகிச்சை பெற்றார். தொடர்ந்து, அவர் திருவள்ளூர் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகிறார்.

இதுகுறித்து, செவ்வாப்பேட்டை போலீஸார் விசாரித்து வருகின்றனர்.

அம்பத்தூர் அருகே

முட்புதரில் பதுக்கிய அரை டன் புகையிலை பொருட்கள் பறிமுதல்

ஆவடி

அம்பத்தூர் அருகே பதுக்கி வைக்கப்பட்டிருந்த அரை டன் அளவுள்ள புகையிலைப் பொருட்களை நேற்று போலீஸார் பறிமுதல் செய்தனர். இது தொடர்பாக ஒருவரை போலீஸார் கைது செய்தனர்.

சென்னை, அம்பத்தூர் அருகே கள்ளிக்குப்பம் அணுகு சாலையை ஒட்டியுள்ள மைதானத்தில் முட்புதரில் தமிழக அரசால் தடை செய்யப்பட்ட புகையிலைப்பொருட்கள் பதுக்கி வைக்கப்பட்டு விற்பனை செய்யப்பட்டு வருவதாக அம்பத்தூர் போலீஸாருக்கு ரகசியத் தகவல் கிடைத்தது.

இதையடுத்து, அம்பத்தூர் போலீஸார் சம்பவ இடம் விரைந்து தீவிர சோதனையில் ஈடுபட்டனர். அச்சோதனையில், மைதானத்தில் உள்ள முட்புதரில் அரை டன் அளவுள்ள புகையிலைப் பொருட்கள் பதுக்கி வைக்கப் பட்டிருந்தது தெரியவந்தது. அந்த புகையிலைப் பொருட்களை போலீஸார் பறிமுதல் செய்தனர்.

இதுகுறித்து வழக்குப் பதிவு செய்த போலீஸார் நேற்று செங்குன்றம் அடுத்த கிராண்ட்லைன் பகுதியைச் சேர்ந்த கண்ணன் (51), என்பவரை கைது செய்தனர். தொடர்ந்து, போலீஸார் நடத்திய விசாரணையில் தெரியவந்ததாவது:

தமிழக அரசால் தடை செய்யப்பட்ட புகையிலைப் பொருட்களை, கண்ணன் பிற மாநிலங்களிலிருந்து கடத்தி வந்து, அம்பத்தூர் பகுதியில் பதுக்கி வைத்து சென்னை புறநகர் பகுதிகளில் விற்பனை செய்து வந்துள்ளார்.

அந்த வகையில், மைதானத்தில் அரை டன் தடை செய்யப்பட்ட புகையிலைப் பொருட்களை அவர் பதுக்கி வைத்துள்ளார்.

இவர் மீது கூடுவாஞ்சேரி, கவரப்பேட்டை, குன்றத்தூர் ஆகிய காவல் நிலையங்களில் புகையிலைப் பொருட்கள் விற்பனை செய்த வழக்குகள் நிலுவையில் உள்ளன.

இவ்வாறு அந்த விசாரணையில் தெரியவந்தது.

இந்து தமிழ் திசை

பொறுப்பல: இந்தச் செய்தித்தாளில் பிரசுரம் ஆகியுள்ள விளம்பரங்களின் அமைப்படியில் செயல்படுமுன், அவற்றில் உள்ள தகவல்கள் சரியானவைதானா என்பதை போதுமான அளவு விசாரித்து சரிபார்த்துக்கொள்ளுமாறு வாசகர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். விளம்பரங்கள்/ விளம்பரதாரர் / அவர்களின் தயாரிப்புகள் / சேவைகள் போன்றவற்றின் நம்பகத்தன்மைக்கு இந்தச் செய்தித்தாளின் உரிமையாளரும் பதிப்பாளருமான கஸ்தூரி & சன்ஸ் லிமிடெட் / கே.எஸ்.எல். மீடியா லிமிடெட் உத்தரவாதம் அளிக்கவில்லை. இந்தச் செய்தித்தாளில் வெளியாகும் விளம்பரங்களால் ஏதேனும் சேதம் அல்லது இழப்பு ஏற்படும் பட்சத்தில், இந்தச் செய்தித்தாளின்/ மேற்சொன்ன நிறுவனங்களின் உரிமையாளர், பதிப்பாளர், அச்சிடுவோர், ஆசிரியர், இயக்குநர்கள், ஊழியர்கள் ஆகியோர் எந்தச் சூழலிலும் எந்த வகையிலும் அதற்குப் பொறுப்பாகமாட்டார்கள்.

படைப்புகளை அனுப்புவோர் பிரதி எடுத்துவைத்துக்கொண்டு அனுப்பவும். பிரசுரமாகாதவற்றைத் திரும்ப அனுப்ப இயலாது.

ஜனா ஸ்மால் ஃபைனான்ஸ் பேங்க்
(ஒரு அட்டவணை கமர்ஷியல் பேங்க்)

பதிவு அலுவலகம்: தி ஃபர்வே, தரை & முதல் தளம், சர்வே எண்.10/1, 11/2 & 12/2B, ஆஃப் டாம்லூர், கொரமங்களம் உள் வட்ட சாலை, EGL பிசினஸ் பார்க் அடுத்து, செல்லகாட்டா, பெங்களூர்-560071. **கிளை அலுவலகம் :** எண்.28/36, தெற்கு மேற்கு போக் சாலை, தி.நகர், சென்னை - 600017.

மின்-ஏலம் அறிவிப்பு

2002-ம் ஆண்டு (SARFAESI ACT) கடனீட்டுச் சொத்துக்களை ரொக்கமாக்குதல் மற்றும் மறுகட்டமைப்பு செய்தல் மற்றும் பாதுகாப்பு வட்டிச் சட்டத்தின் அமலாக்கம் மற்றும் 2002-ம் ஆண்டு (அமலாக்கம்) பாதுகாப்பு வட்டி விதிகள் 8(6) மற்றும் 9-ன் கீழ் மின்-ஏலம் மூலம் விற்பனை செய்வதற்கான பொது அறிவிப்பு.

கீழே கையொப்பமிட்ட **ஜனா ஸ்மால் ஃபைனான்ஸ் பேங்க் லிமிடெட்-ன்** அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி ஆனவர் SARFAESI சட்டம் பிரிவு 13(4)ன் கீழ், கீழே விவரிக்கப்பட்டுள்ள சொத்துக்களை தனது சுவாதீனத்தில் எடுத்துக்கொண்டார். இதன் மூலம் கடன்தாரர் குறிப்பாகவும், பொது மக்களுக்கும் அறிவிப்பதாவது, கீழ்க்கண்ட நபர்களிடமிருந்து, வங்கிக்கு செலுத்தவேண்டிய கடன் தொகையை வசூலிக்கும் பொருட்டு, கீழ்குறிப்பிட்ட கணக்குகளின் அடமான சொத்துக்களை **"உள்ள இடத்தில் உள்ளவாறு" மற்றும் "உள்ளது உள்ளவாறு"** எனும் அடிப்படையில் **மின் ஏலத்தின் (e-auction)** மூலம் விதிகள் மற்றும் நிபந்தனைகளின்படி கீழ்குறிப்பிட்ட நாட்களில் விற்பனை செய்ய முடிவு செய்யப்பட்டுள்ளது.

வ. எண்.	கடன் கணக்கு எண்.	உண்மையான கடன்தாரர்/ இணை-கடன்தாரர்/ ஜாமீன்தாரர் பெயர்	13-2 அறிவிப்பு நாள்	சுவாதீன நாள்	24.09.2024-ன்படி தற்போதைய நிலுவை தொகை	சொத்தினை பார்வையிடும் நான் & நேரம்	ரிசர்வ் தொகை INR-ல்	முன்வைப்பு தொகை (EMD) INR-ல்	மின்-ஏலம் நாள் மற்றும் நேரம்	ஏலம் சமர்ப்பிக்கும் கடைசி நாள், நேரம் மற்றும் இடம்
1	32779420000063	1) திரு. மாயவன் கலியபெருமாள், த/பெ. பெருமாள், 2) திருமதி. பாப்பாத்தி, க/பெ. கலியபெருமாள்	22-06-2024	04-09-2024	ரூ.2,56,474.70 (ரூபாய் இரண்டு இலட்சத்து ஐம்பத்தி ஆறாயிரத்து நானூற்றி எழுபத்தி நான்கு மற்றும் பைசா எழுபது மட்டும்)	18.10.2024 காலை 9.30 மணிமுதல் மாலை 5.00 மணிவரை	ரூ.4,09,000/- (ரூபாய் நான்கு இலட்சத்து ஒன்பதாயிரம் மட்டும்)	ரூ.40,900/- (ரூபாய் நாற்பதாயிரத்து தொள்ளாயிரம் மட்டும்)	01.11.2024 நேரம் : காலை 11.00 மணி முதல் மாலை 02.00 மணிவரை	31.10.2024, மாலை 5.00 மணிவரை, ஜனா ஸ்மால் ஃபைனான்ஸ் பேங்க் லிமிடெட், எண்.28/36, தெற்கு மேற்கு போக் சாலை, தி.நகர், சென்னை - 600017.
	அடமான சொத்தின் விவரம்: நிலம் மற்றும் கட்டிடம் மற்றும் அதனை சார்ந்த பகுதிகளும், பழைய ச.எண். 292/1ஏ, 291/1பி, பட்டாவின்படி புதிய ச.எண். 291/2ஏ2பி, அளவுகள் 1508 சதுர அடி பரப்பு, கதவு எண்.3, பாண்டியன் தெரு, ஒண்டிகுப்பம், மணவாளநகர், வெங்கதிர் கிராமம், திருவள்ளூர் தாலுகா மற்றும் மாவட்டம் மற்றும் கடலூர் பதிவு மாவட்டம், கடலூர் இணை 2 சார் பதிவு மாவட்டம், காரைக்குடி கிராமம், நத்தம் புதிய ச.எண்.308/9-0.0219 சதுர மீட்டர், இதில் 0.0101.25 சதுர மீட்டர் அதன் பழைய ச.எண். 222/ஏ16-ஏக்.0.32. அதன் முன்னதான ச.எண்.172/5 - 0.13.0. அளவுகள் 1090 சதுர அடி அதாவது 101.25 சதுர மீட்டர் மனை மற்றும் **எல்லைகள் : கிழக்கு :** பெருமாள் வீடு, **மேற்கு :** கூதான் வகையறா மனை, **வடக்கு :** ஏகாம்பரம் வீடு, **தெற்கு :** சாலை. அளவுகள் (சதுர அடி/சதுர யார்டு, இதர) மொத்த பரப்பு 1090 சதுர அடி (அல்லது) 101.25 சதுர மீட்டர். இயற்கை மற்றும் சொத்தின் அனுமதி உபயோகம் a) ஃபிரீ ஹோல்ட், b) குடியிருப்பு. தமிழ்நாடு, கடலூர் இணை-2 சார் பதிவு மாவட்டம் மற்றும் கடலூர் பதிவு மாவட்டத்திற்குட்பட்டது.								
2	46009420001411	1) திரு. A. சுந்தரராசு, த/பெ. ஆனந்தன், உரிமையாளர் திருமதி. ரேவதி, 2) திருமதி. கலையரசி	22-06-2024	05-09-2024	ரூ.7,82,666.00 (ரூபாய் ஏழு இலட்சத்து எண்பத்தி இரண்டாயிரத்து அறுநூற்றி அறுபத்தி ஆறு மட்டும்)	18.10.2024 காலை 9.30 மணிமுதல் மாலை 5.00 மணிவரை	ரூ.6,87,000/- (ரூபாய் ஆறு இலட்சத்து எண்பத்தி ஏழாயிரம் மட்டும்)	ரூ.68,700/- (ரூபாய் அறுபத்தி எட்டாயிரத்து எழுநூறு மட்டும்)	01.11.2024 நேரம் : காலை 11.00 மணி முதல் மாலை 02.00 மணிவரை	31.10.2024, மாலை 5.00 மணிவரை, ஜனா ஸ்மால் ஃபைனான்ஸ் பேங்க் லிமிடெட், எண்.28/36, தெற்கு மேற்கு போக் சாலை, தி.நகர், சென்னை - 600017.
	சொத்தின் அட்டவணை: சொத்து மற்றும் அதனை சார்ந்த பகுதிகளும், விழுப்புரம் பதிவு மாவட்டம், கண்டமங்களம் SRO மற்றும் கண்டமங்களம் பஞ்சாயத்து யூனியன், ஆழியூர் கிராமம், ராம் நகர், மனை எண். 21 மற்றும் 22, அயன் புஞ்சை எண். 178/3ஏ1ஏ ஹெக்டேர் 0.16.0 ஏர்ஸ் அயன் புஞ்சை எண். 178/3ஏ1பி ஹெக்டேர் 0.26.0 ஏர்ஸ், பழைய சர்வே எண். அயன் புஞ்சை எண். 178/23ஏ ஏக்கர் ஹெக்டேர் 0.0.41.50 ஏக்கர் 1.30 சென்ட்ஸ், அளவுகள் கிழக்கிலிருந்து மேற்கு 44 அடி, வடக்கிலிருந்து தெற்கு 52 அடி, மொத்தம் 2288 சதுர அடி. **எல்லைகள் : வடக்கு :** 16 அடி சாலை, **தெற்கு :** மனை எண்.20, **கிழக்கு :** மனை எண்.20, **மேற்கு :** மனை எண்.23. சொத்தின் ஏரியா : 2288 சதுர அடி. கண்டமங்களம் சார் பதிவு மாவட்டம் மற்றும் விழுப்புரம் பதிவு மாவட்டத்திற்குட்பட்டது.								

மின் ஏலமானது **"உள்ள இடத்தில் உள்ளவாறு" & "உள்ளது உள்ளவாறு"** என்ற அடிப்படையில் **"ஆன்லைனில்"** நடத்தப்படும். மேலே கூறப்பட்ட சொத்தை வாங்குவது தொடர்பான அனைத்து தொகைகளும் **ஜனா ஸ்மால் ஃபைனான்ஸ் பேங்க் லிமிடெட்** பெயரில் வழங்க வேண்டும். வங்கியின் அங்கீகரிக்கப்பட்ட சேவை வழங்குனர் நிறுவனத்தின் மூலம் இணையதள ஏற்பாட்டின் **M/s. 4 Closure** இணையதளம் **https://bankauctions.in & www.foreclosureindia.com** மூலம் ஏலம் நடத்தப்படும். மேலும் விபரங்களுக்கு, விதிகள் மற்றும் ஆன்லைன் மின-ஏல பயிற்சி, விற்பனை விதிகள் மற்றும் நிபந்தனைகள் அடங்கிய மின் ஏல டெண்டர் ஆவணம் ஆகிய தொடர்புக்கு **M/s. 4 Closure, தொடர்பு திரு.M.தினேஷ், தொடர்பு எண். 8142000735. Email id: info@bankauctions.in / dinesh@bankauctions.in.** மேலும் நிபந்தனை மற்றும் விதிகள் விபரங்களுக்கு, ஏல விபரங்கள் மற்றும் மற்ற சொத்தின் விவரங்களுக்கு **ஜனா ஸ்மால் ஃபைனான்ஸ் பேங்க் அதிகாரிகள் திரு. சலீல் P, (மொபைல் எண். 9884474084), email: salil.p@janabank.com, திரு. துரை முருகன் (மொபைல் எண். 9841638849) email : durai.murugan@janabank.com, & திரு. ரஞ்சன் நாயக் (மொபைல் எண். 6362951653), email: ranjan.naik@janabank.com,** தொடர்பு கொள்ளவும். அங்கீகரிக்கப்பட்ட அதிகாரிக்குத் தெரிந்த வரையில் சொத்துக்களின் மீது எந்த வில்லங்கங்களும் இல்லை, எனினும் ஏலத்தில் விடப்படும் சொத்துக்கள் விஷயமாக வில்லங்கங்கள் இதன் உரிமை குறித்து ஆர்வமுள்ள விலைக்குறிப்பிட்டாளர்கள் சொந்தமாக விசாரித்து அறிந்துகொள்வது அவசியம். இந்த அறிவிப்பானது மேற்குறிப்பிட்ட கடன்தாரர்கள்/ ஜாமீன்தாரர்கள்/ அடமானதாரர்கள் அடமான சொத்துக்களின் மின்-ஏலம் அட்டவணை அறிந்து கொள்ள அறிவிப்பாகும். கடன்தாரர்/ஜாமீன்தாரர்/அடமானதாரர் மின் ஏலம் நாளுக்கு முன் மேற்குறிப்பிட்ட தொக